**நீதித்துறை நடுவர் எண்.2, நீதிமன்றம், திண்டுக்கல்**

**முன்னிலை: திரு.C. தினேஷ்குமார், B.A.LL.B(Hons)., LL.M.,**

**நீதித்துறை நடுவர் எண்.2 , திண்டுக்கல்**

**2026ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20ம் நாள் வியாழக்கிழமை**

**சுருக்கு வழக்கு எண். 1987/2025**

**CNR. No.TNDG03-003946-2025**

அரசுக்காக,
சார்பு ஆய்வாளர்,
நகர் வடக்கு காவல் நிலையம்
திண்டுக்கல்
குற்ற எண்.1037/2024
சட்டப்பிரிவு 4(i)(C) TNP Act

... குற்ற முறையிடுபவர்

/ எதிர் /

வீரகாளிமுத்து, (24/2025)
த/பெ. முருகன்,
காளியம்மன் கோவில் தெரு,
பாலகிருஷ்ணாபுரம்,
திண்டுக்கல்.

...எதிரி

**Case – Summary**

| *Statement as per rule 106 of criminal rules of practice, 2019* | | |
|---|---|---|
| **S.No** | **Description** | **Details** |
| 1. | Serial Number | Summary Trial Case (STC) No. 1987 of 2025 |
| 2. | Name of the Police station and crime Number | State Represented by Sub Inspector of Police Town North PS. Dindigul in Cr.No.1037/2024 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | Name of the accused | Veerakalimuthu | | |
| 4. | Father’s Name | Murugan | | |
| 5. | Occupation | - | | |
| 6. | Residence | Kaliamman Kovil Street, Balakrishnapuram, Dindigul | | |
| 7. | Age | 24/2025 | | |
| 8. | Date of occurrence | 02.10.2024 | | |
| 9. | Date of complaint<br>Date of filing Charge sheet | 02.10.2024<br>01.07.2025 | | |
| 10. | Date of apprehension | 02.10.2024 | | |
| 11. | Date of release on bail | 02.10.2024 (Station Bail) | | |
| 12. | Date of commitment | Not applicable | | |
| 13. | Date of furnishing copies of document U/s. 207 Cr.P.C. | 22.09.2025 | | |
| 14. | Date of questioning / Charge framing and plea of the accused | On 19.01.2026 the accused is questioned on substance of accusation U/s. 4(1)(C) TNP Act. Accused is denied as false case and pleaded not guilty and claims to be tried. | | |
| 15 | Date of commencements of trial -The date of examination – in chief and cross- examination of a witness | Witnesses | Examined in – Chief | Examined - in Cross |
| | | PW1 | 06.07.26 | 06.07.26 |
| | | PW2 | 20.07.26 | 20.07.26 |
| | | PW3 | 20.07.26 | 20.07.26 |
| | | PW4 | 20.07.26 | 20.07.26 |
| 16. | The date of examination of the accused under section 313 of the code – Closed of trial | 27.07.2026 | | |
| 17. | Sentence on order | முடிவாக, எதிரி மீதான சட்டப் பிரிவு 4(1)(c) TNP Act –ன் கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்படாததால் எதிரியை | | |

| | | |
|---|---|---|
| | | குற்றவாளி இல்லை என முடிவு செய்து குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 18. | Service of copy of Judgment or finding on accused | No. The Judgment was uploaded on CIS portal and made available in E- Courts |
| 19. | Explanation of delay | There is no inordinate in the disposal of the case |
| 20. | Property order | Property order passed. |

இவ்வழக்கு 01.07.2025ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் சுருக்கு வழக்கு எண்.1987/2025ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தில் இறுதியான விசாரணைக்கு வந்தபொழுது அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு உதவி குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் ஆஜராகியும், குற்றம் சாட்டப்பட்ட எதிரிதரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.பாலவெங்கடேஷ்குமார் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களைப் பார்வையிட்டும் இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும் வந்து இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

### I. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:

1. அரசு தரப்பு வழக்கு யாதெனில், கடந்த 02.10.2024ம் தேதி 15.00 மணிக்கு திண்டுக்கல் AMC ரோடு ஆனந்த் பொறிக்கடை அருகே எதிரி அரசின் எவ்வித அனுமதியும் இன்றி தனது சுயலாபத்திற்காக 180ml

அளவுகொண்ட (Golden Choice–11) மதுபான பாட்டில்களை விற்பனைக்கு வைத்திருந்த குற்றத்திற்காக எதிரி மீது சட்டப்பிரிவு 4(1)(c) TNP Act படி திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலைய சார்பு ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**II. வழக்கின் நகல்கள் வழங்குதல் மற்றும் குற்றச்சாட்டு வனைந்து குற்றச்சாட்டை குறித்து வினவுதல்:**

2. குற்ற இறுதி அறிக்கை பரிசீலனைக்கு பின் எதிரிக்கு எதிராக முகாந்திரம் இருந்ததால் இந்நீதிமன்றத்தால் மேற்படி எதிரிக்கு எதிராக இவ்வழக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்திலிருந்து எதிரிக்கு இவ்வழக்கு சம்மந்தமாக நீதிமன்றத்தில் ஆஜராக அழைப்பாணை அனுப்பி அவர்கள் முன்னிலை ஆனவுடன் வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக கு.வி.மு.ச பிரிவு 207ன் கீழ் 22.09.2025 நாளன்று வழங்கப்பட்டு போதிய அவகாசம் வழங்கப்பட்டு, வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து எதிரி மீதான சட்டப்பிரிவு 4(1)(c) TNP Act –ன் கீழான குற்றச்சாட்டின் சாராம்சத்தை விளக்கிக் கூறியபோது எதிரி குற்றத்தை மறுத்ததால், எதிரிக்கு எதிராக இதச பிரிவு 4(1)(c) TNP Act–ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து தமிழில் வாசித்து விளக்கிக்கூறிய போது எதிரி குற்றவாளி இல்லை என மறுத்ததால் அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

**III. அரசு தரப்பு சாட்சிகள்**

3. அரசு தரப்பில் எதிரி மீதான குற்றத்தை நிரூபிக்க அரசு தரப்பில் மொத்தம் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.5 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**IV. அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம் :**

4. இவ்வழக்கின் சம்பவம் பற்றி சிறப்பு சார்பு ஆய்வாளர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது நீதிமன்ற சாட்சியத்தில், கடந்த 02.10.2024 அன்று போலீஸ் பார்ட்டியுடன் ரோந்து சென்றபோது, எதிரி AMC ரோடு ஆனந்த் பொறிக்கடை அருகே 180 ml அளவுள்ள Golden choice பிராந்தி பாட்டில்கள் 11 ஐ வைத்திருந்தவரை காரணம் கூறி கைது செய்தும், தனிநபர்கள் சாட்சிகள் யாரும் முன்வராததால் போலீஸ் சாட்சிகள் முன்னிலையில் வழக்குச் சொத்துக்ளை அத்தாட்சியில் கைப்பற்றியது பற்றியும், எதிரி மற்றும் வழக்குச் சொத்துக்களுடன் நிலையம் வந்து எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்தும், எதிரியை நீதிமன்ற காவலுக்குட்படுத்தியது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலமாக அ.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. இவ்வழக்கில் அ.சா.2, அ.சா.3 ஆகியோர்கள் தங்களது நீதிமன்ற சாட்சியத்தில், அன்றையதினம் சிறப்பு சார்பு ஆய்வாளருடன் ரோந்து செய்தது குறித்தும், எதிரியிடமிருந்து வழக்குச் சொத்துக்கள் கைப்பற்றியது குறித்தும், அத்தாட்சியில் தான் கையொப்பம் செய்தது குறித்தும், பின்பு சார்பு ஆய்வாளர் கைது செய்தார் என்றும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தது குறித்தும் சாட்சியம்

அளித்துள்ளார்கள். அவர்கள் மூலமாக அத்தாட்சியில் உள்ள கையொப்பங்கள் அ.சா.அ.2 மற்றும், அ.சா.அ.3 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது நீதிமன்ற சாட்சியத்தில், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியின் கையெழுத்து கையொப்பம் தனக்கு நன்கு பரிட்சயம் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கின் சார்பு ஆய்வாளர் ராமர் பாண்டியன் இவ்வழக்கினை புலன் விசாரரைணக்கு எடுத்துக் கொண்டு சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் எதிரியை கைது செய்து தக்கபிணையில் விடுவித்துள்ளார் என்றும், படிவம் 91ன் மூலம் வழக்குச் சொத்தை RPR No. 106/2024ஆக பதிவு செய்ததாகவும், எதிரி மீது சட்டப்பிரிவு 4(1)(c) TNP Act ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிவுற்றது.

**V.எதிரிக்கு கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ) பிரிவின் கீழ் வினவுதல்**

7. அரசு தரப்பில் சாட்சியத்தை முடித்துக் கொண்டபின்பு எதிரிக்கு பாதகமாக அரசு தரப்பு சாட்சிகள் அளித்த சங்கதிகளை கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் 27.07.2026 நாளன்று தொகுத்தளித்து வினாவியபோது அரசு தரப்பு சாட்சியங்களை "பொய் சாட்சி" என்று சாட்சியங்களை மறுத்தார். எதிரி தரப்பில் சாட்சிகள் இல்லை என கூறினார். அத்துடன் எதிரி தரப்பு சாட்சி விசாரணை முடிவுற்றது.

## VI. வாதுரைகள்:

### 1. அரசு தரப்பில்:

8. கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வாதிடும் போது எதிரிக்கு எதிரான வழக்கு தகுந்த சாட்சிய, சான்றாவணங்களின் அடிப்படையில் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எதிரி அரசு மதுபான பாட்டில்களை தனது சுயலாபத்திற்காக பொது இடத்தில் சில்லறை விற்பனைக்கு வைத்திருந்ததை அத்தாட்சியில் கைப்பற்றி படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டதை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், இவ்வழக்கின் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டும், எதிரிக்கு தண்டனை வழங்க வேண்டுமென்று வாதிட்டார்.

### 2. எதிரி தரப்பில்:

9. எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும் போது எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் எதுவும் நிரூபிக்கப்படவில்லை. இவ்வழக்கில் எதிரிக்கு எதிராக எந்த சாட்சியமும் இல்லை என்றும், இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், அரசு தரப்பில் இவ்வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுவிக்கலாம் என்று வாதிட்டார்.

## VI. ஆய்விற்குரிய பிரச்சனை:

10. இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில் எதிரிக்கு எதிரான அரசு தரப்பு குற்றச்சாட்டுக்கள் நியாயமான

சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

**VII. தீர்வு:–**

11. அரசு தரப்பு வழக்கானது, கடந்த 02.10.2024ம் தேதி 15.00 மணிக்கு திண்டுக்கல் AMC ரோடு ஆனந்த் பொறிக்கடை அருகே எதிரி அரசின் எவ்வித அனுமதியும் இன்றி தனது சுயலாபத்திற்காக 180ml அளவுகொண்ட (Golden Choice–11) மதுபான பாட்டில்களை விற்பனைக்கு வைத்திருந்த குற்றத்திற்காக எதிரி மீது சட்டப்பிரிவு 4(1)(C) TNP Act–ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

12. மேற்சொன்ன குற்றச்சாட்டை அரசு தரப்பு நிரூபித்துள்ளதா? என்று பார்க்கும்போது, இவ்வழக்கில் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையைப் பரிசீலனை செய்யும்போது, 02.10.2024 அன்று போலீஸ் பார்ட்டியுடன் குற்ற தடுப்பு சம்மந்தமாக ரோந்து செய்து கண்காணித்துக் கொண்டிருந்தபோது, பின்னர் பெயர் விலாசம் கேட்டுத் தெரிந்த எதிரி வீரகாளிமுத்து என்பவர் AMC ரோடு ஆனந்த் பொறிக்கடை அருகே 180 ml அளவுள்ள Golden choice பிராந்தி பாட்டில்கள்– 11 ஐ தனது சுயலாபம் கருதி விற்பனைக்கு வைத்திருந்த குற்றத்திற்காக எதிரி மீது இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

13. மேலும், இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர், தனது முதல் விசாரணையில், கடந்த 02.10.2024 அன்று போலீஸ் பார்ட்டியுடன் ரோந்து சென்றபோது, எதிரி AMC ரோடு

ஆனந்த் பொறிக்கடை அருகே 180 ml அளவுள்ள Golden choice பிராந்தி பாட்டில்கள் 11 ஐ வைத்திருந்தவரை காரணம் கூறி கைது செய்தும், தனிநபர்கள் சாட்சிகள் யாரும் முன்வராததால் போலீஸ் சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து வழக்குச் சொத்துக்களை கைப்பற்றி நிலையம் வந்து எதிரிமீது வழக்கு பதிவு செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

14. மேலும், அ.சா.2, அ.சா.3 ஆகியோர்கள் அ.சா.1ன் சாட்சியத்தை ஒத்து சாட்சியம் அளித்துள்ளார்கள். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியாக விசாரிக்கப்பட்ட அ.சா.4 ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார். அவ்வாறு உள்ளபோது, எதிரியானவர் அரசின் அனுமதி இல்லாமல் மதுபான பாட்டில்களை விற்பனைக்கு வைத்திருந்ததாக குறிப்பிட்டுள்ளபோது, இவ்வழக்கில் பொதுமக்கள் யாரும், எதிரி மீது எந்தவொரு புகாரும் அளிக்கவில்லை. மேலும், பொதுமக்கள் யாரும் சாட்சியாக சேர்த்து அரசு தரப்பு வழக்கிற்கு உறுதியூட்டும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை. மேலும், அ.சா.1 அவரது குறுக்கு விசாரணையில், "இவ்வழக்கில் சம்பவ சாட்சி மற்றும் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தது நான் தான் என்றால், சரிதான். நான் தான் முதல் முதலாக எதிரியை விசாரணை செய்த விசாரணை அதிகாரி நான் தான் என்றால், சரிதான். எதிரியை ஒப்புதல் வாக்குமூலம் தரவில்லை என்றால், சரிதான். முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள வெள்ளை நிற சாக்குப்பையை கைப்பற்றவில்லை என்றால், சரிதான். சம்பவமான பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள மக்கள் நடமாற்றம் அதிகம்

உள்ள, போக்கு வரத்து மிகுந்த பகுதி என்றால், சரிதான். அத்தாட்சி தனி நபர் சாட்சிகள் முன்னிலையில் பெறப்படவில்லை என்றால், சரிதான். சம்பவம் குறித்து பார்வை மகஜர், மாதிரி வரைபடம் நான் தயார் செய்யவில்லை என்றால், சரிதான். கைப்பற்றியதாக சொல்லப்படும் 11 பாட்டில்களும் டாஸ்மார்க் கடையின் Sticker ஒட்டப்பட்டது என்றால், சரிதான். அவர் எந்த கடையில் வாங்கினார் என்ற விபரங்களை விசாரித்து சாட்சி எதுவும் பெறவில்லை என்றால், சரிதான்" என்று சாட்சியம் அளித்துள்ளபோது, எதிரி யார் யாருக்கு விற்பனை செய்தார் என்றோ, பொதுமக்கள் யார் யார் அதை வாங்கிச் சென்றார்கள் என்றோ எந்தவிதமான சாட்சியமும் அளிக்காத நிலையிலும், சம்பவ இடம் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து அதிகம் நிறைந்த இடமாக இருந்தபோதிலும், அங்கு இருந்த பொதுமக்கள் யாரையும் இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்து, அவர்கள் முன்னிலையில் கைப்பற்றி உறுதியூட்டும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை.

15. மேலும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி, தனது புலன் விசாரணை மூலம் எதிரிதான் மதுபான பாட்டில்களை விற்பனைக்கு வைத்திருந்தார் என்பதையும், அவர் வைத்திருந்த மதுபான பாட்டில்களை பகுப்பாய்விற்கு அனுப்பி பரிசோதனை செய்யாததாலும், பொதுமக்கள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றவில்லை என்பதால் எதிரி அரசின் அனுமதியின்றி அரசின் மதுபான பாட்டில்களை தனது சுயலாபம் கருதி விற்பனைக்காக வைத்திருந்ததை தகுந்த சாட்சிகள்

மற்றும் சான்றாவணங்களின் மூலம் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

16. முடிவாக, எதிரி மீதான சட்டப் பிரிவு 4(1)(c) TNP Act –ன் கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்படாததால் எதிரியை குற்றவாளி இல்லை என முடிவு செய்து குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

17. இவ்வழக்கில் முன்னிறுத்தப்பட்ட வழக்குச் சொத்தான RPR No. 106/2024ல் உள்ள 180ml அளவுள்ள Golden Choice மதுபான பாட்டில்கள் – 11–ஐ மேல்முறையீடு காலத்திற்குப் பின்பு கொட்டி அழித்து அதற்கான சான்றிதழ் மற்றும் போட்டோ/ வீடியோவுடன் இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்க இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது.

18. இவ்வழக்கின் தீர்ப்பின் மீது மேல்முறையீடு செய்யப்பட்டிருந்தால், மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக பெறப்பட்ட கு.வி.மு.ச. 437(A) பிணைப்பத்திரமானது 6 மாத காலத்திற்கு அமலில் இருக்கும் என்றும் பின்னர் தானாக இரத்தாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு

என்னால் சரிபார்க்கப்பட்டு 2026ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20–ம் நாள் இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரபப்பட்டது.

DINESHKUMAR C Digitally signed by DINESHKUMAR C Date: 2026.08.20 18:50:48 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
திண்டுக்கல்.

**I. அரசு தரப்பு சாட்சிகள்**

| Sl. No. | Examined as | Name of Witness | Date of examination | Exhibits Marked |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.1 | S. மகேஸ்வரன்<br>சிறப்பு சார்பு ஆய்வாளர் | 06.07.2026 | அ.சா.ஆ.1 |
| 2. | அ.சா.2 | இளங்கோவன்<br>த/பெ. மூர்த்தி | 20.07.2026 | அ.சா.ஆ.2 |
| 3. | அ.சா.3 | சையது அன்வர்சாதிக்<br>த/பெ. சையது தாவூத் | 20.07.2026 | அ.சா.ஆ.3 |
| 4. | அ.சா.4 | அருண்பிரசாத்<br>அணிராஜ் | 20.07.2026 | அ.சா.ஆ.4 |

**II. அரசு தரப்பு சான்றாவணங்கள் :**

| Sl. No. | Exhibits | Marked through | Date of Document | Description of document |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | அ.சா.1 | 02.10.2024 | முதல் தகவல் அறிக்கை |
| 2. | அ.சா.ஆ.2 | அ.சா.2 | 02.10.2024 | அத்தாட்சியில் உள்ள 1 வது கையொப்பம் |
| 3. | அ.சா.ஆ.3 | அ.சா.3 | 02.10.2024 | அத்தாட்சியில் உள்ள 2 வது கையொப்பம் |
| 4. | அ.சா.ஆ.4 | அ.சா.4 | 02.10.2024 | அத்தாட்சி |
| 5. | அ.சா.ஆ.5 | அ.சா.5 | 02.10.2024 | படிவம் 91 |

**III.** **<u>அரசு தரப்பு சான்றுப் பொருள்கள்</u>** **–** இல்லை

**IV.** **<u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மற்றும் சான்றுப் பொருள்கள்</u>** **–** இல்லை

DINESHKUMAR C
Digitally signed by DINESHKUMAR C
Date: 2026.08.20 18:50:58 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
**திண்டுக்கல்.**

**<u>குறிப்பு:</u>**

1. வழக்கின் முடிவு எதிரிக்கும் / காவல் துறையினருக்கும் தெரிவிக்கப்பட்டது.
2. எதிரி விசாரணை காலத்தில் பிணையில் இருந்தார்.
3. எந்த சாட்சிகளும் 3 முறைக்கு மேல் நிறுத்திவைக்கப்படவில்லை.